# இந்தியப் பிரதமர் மோடியை சந்தித்தார் ஜனாதிபதி ரணில்



## ஒப்பந்தங்களும் கைச்சாத்து




இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணமாக நேற்று மாலை இந்தியா சென்றடைந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதுடெல்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

இதன்போது பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் முக்கிய ஒப்பந்தங்களும் கைச்சாத்தாகியுள்ளன.

இதில் இருநாட்டு உறவுகள், தமிழக மீனவர்கள் கைது, இலங்கைத் தமிழர்கள் நலன் போன்றவற்றைக் குறித்து விவாதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகளை வெற்றிகொள்வதில் இந்திய - இலங்கை புரிந்துணர்வு வலுவான மூலாதாரமாக இருந்ததாக இரு நாடுகளினதும் தலைவர்களும் தெரிவித்துள்ளனர். இலங்கை மக்களுக்காகவும் அரசாங்கத்துக்காகவும் முன்னொருபோதுமில்லாத வகையில் இந்தியாவால் தக்கதருணத்தில் வழங்கப்பட்ட ஆதரவுக்காக இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்கு விசேட நன்றிகளையும் தெரிவித்திருந்தார். 2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 05 வெள்ளிக்கிழமை 21.07.2023 கதிர் 34

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

## சிங்கள மக்களுக்குத் துரோகமிழைத்த கனேடிய உயர்ஸ்தானிகரை உடனே

### வெளியேற்ற வேண்டும் - சரத் வீரசேகர

வடக்கிற்குச் சென்று, தமிழ் மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடிய கனடிய உயர்ஸ்தானிகரை நாட்டிலிருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டும், என ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றிய அவர், உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதை அமெரிக்காவும் கனடாவும் நிறுத்திக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஏற்ப இந்நாட்டைப் பிரிக்க நாம் இடமளிக்கப் போவதில்லை. 13 ஆவது திருத்தச்சட்டம் என்பது 2 ➤

## 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த காங்கிரஸ் தலைவர் அழகிரி வலியுறுத்து

இலங்கைத்தமிழர்களுக்கான 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி வலியுறுத்தியிருக்கிறார்.

இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களுக்கு அதிகாரம் வழங்கும் வகையில் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தியால் இலங்கைத் தமிழர்களுக்காக போராடி பெறப்பட்ட 13 ஆவது சட்டத்திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். 2 ➤

## கெஹலிய மீதான நம்பிக்கையில்லா பிரேரணை சபாநாயகரிடம் கையளிப்பு

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் ஐக்கிய மக்கள் சக்தி அனுசரணையுடன் கையளித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன மற்றும் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் இன்று பிற்பகல் சபாநாயகரிடம் பிரேரணையை கையளித்தனர்.

சுமார் 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரேரணையில் கையெழுத்திட்டுள்ளதாக ஜெயவர்தன தெரிவித்தார்.

வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடி மற்றும் தரமற்ற மருந்துகளை கொள்வனவு செய்தமைக்கு அமைச்சர் ரம்புக்வெல்ல பொறுப்பேற்கவேண்டும் என பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மி)

## முதுகெலும்பிருந்தால் வாக்கெடுப்புக்குச் செல்லுங்கள் - கஜேந்திரகுமார் சவால்!



தமிழ் மக்கள் ஒற்றையாட்சியையா அல்லது சமஷ்டியையா விரும்புகிறார்கள் என்பது குறித்து தெரிந்துகொள்வதற்கு முதுகெலும்பு இருந்தால் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சவால் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் 2 ➤

## ஆட்சியைப் பிடிக்கும் வரை போராட்டம் தொடரும்!

### ஜே.வி.பி. சூளுரை

ஆட்சியை நாம் பிடிக்கும் வரை போராட்டம் தொடரும் என்று ஜே.வி.பியின் முக்கியஸ்தரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

மக்களின் பொருளாதாரப் பிரச்சினை தீரவில்லை. அதிகாரம் உள்ள வர்க்கம் அதிகாரம் அற்ற வர்க்கத்தை நிர்வகித்துக்கொண்டு செல்கின்றது. அவர்களைக் கஷ்டத்தில் தள்ளியுள்ளது. அந்த மக்கள் வாழ்வதற்காகப் 2 ➤

## குருந்தூர்மலையை பௌத்த தொல்பொருள் சின்னமாக பிரகடனப்படுத்த வேண்டும்!

### நாடாளுமன்றில் ஜயந்த சமரவீர வலியுறுத்து



முல்லைத்தீவு குருந்தூர்மலையை, பௌத்த தொல்பொருள் சின்னமாக பிரகடனப்படுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர், இதனை அரசாங்கம் மேற்கொள்ளத் தவறினால், இன ஐக்கியத்திற்கு பாதிப்பு ஏற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்ப் பிரிவினைவாத அரசியல்வாதிகள், குருந்தூர் விகாரை வளாகத்தில் பொங்கல் 2 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

## சிங்கள மக்களுக்குத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்மீது இந்தியாவினால் பலவந்தமாகத் திணிக்கப்பட்ட ஒன்றாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் இன்று செல்லுபடியற்ற ஒன்றாகவே கருதப்படுகிறது. ஏனெனில், இந்தியா இலங்கைக்கு வழங்கிய தனது வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவாகும். புலிகளின் கட்டுப்பாட்டில் வடக்கு - கிழக்கு இருந்துபோது, அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் மகிழ்ச்சியாகவா வாழ்ந்தார்கள்? எனக் கேள்வியெழுப்பியுள்ள அவர், மக்கள் அன்று வாழ்ந்த விதத்தை நேரில் கண்டுள்ளதாகவும், இன்று அந்த நிலைமை மாற்றமடைந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

கல்வியில் முன்னேறியுள்ளார்கள். செல்வந்தர்களாக இருக்கிறார்கள். நன்றாக தொழில் செய்கிறார்கள். வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். தெற்கில் சொத்துக்களை வாங்குகிறார்கள். 52 வீதமான தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் இணைந்துதான் இங்கு வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள், எனவும் அவர் குறிப்பிட்டுள்ளர்.

அரசாங்கம் இங்கு அபிவிருத்திப் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் நிலையில், ஜனாதிபதியைச் சந்தித்து இல்லாத பிரச்சினைகளை உருவாக்க முயற்சிக்க வேண்டாம் என தான் தமிழ் அரசியல்வாதிகளிடம் கேட்டுக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல்வாதிகள் பொய் கூறுவதற்கு என்றும் அஞ்சியதில்லை. ஆனால், சிங்கள அரசியல்வாதிகள் உண்மையைக் கூற தொடர்ச்சியாக அஞ்சினார்கள். இதனால்தான் இவ்வளவு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. சர்வதேச நாடுகளும் இவர்களின் பொய்களை நம்பி ஏற்றுக் கொண்டுள்ளன, எனவும் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வுக்குச் செல்ல வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறுகிறது.

அமெரிக்கா போன்ற பெரிய நாடுகளில், மத்திய அரசாங்கத்தினால் மட்டும் நிர்வாகத்தை மேற்கொள்ள முடியாது என்ற காரணத்தினால்தான் மாநில அரசாங்கங்களுக்கும் அதிகாரம் வழங்கப்படுகிறது. ஆனால், இலங்கை என்பது சிறிய நாடு. இங்கு அதிகாரப் பகிர்வை மேற்கொள்வது உண்மையில் நகைப்புக்குரிய விடயமாகவே கருதப்படுகிறது.

இன்று கனடா, அமெரிக்கா போன்ற நாடுகள் எமது உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுகின்றன. 2000 ஆயிரம் ஆண்டுகள் பழமையான குருந்தூர்மலையில் சில அரசியல்வாதிகள் சிவலிங்கத்தை வைத்து பூசை செய்து, தேவையில்லாத இன- மத மோதல்களை ஏற்படுத்த முயல்கிறார்கள்.

இப்படியான அரசியல்வாதிகளை கனடா உயர்ஸ்தானிகர் சென்று சந்தித்தமையானது, சிங்கள மக்களுக்கு இழைத்த துரோகமாகும். இவரை நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும்.

அமெரிக்கத் தூதுவர் ஜ/லி சங்கும் வடக்கிற்குச் சென்று தமிழ்ப் பிரிவினைவாத அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துள்ளார்.

ஏனைய நாடுகள் தங்களது சுயாதீனத்தை இறுக்கமாகப் பாதுகாக்கும். நாம் பொருளாதார ரீதியாக எவ்வளவு பலவீனமாக இருந்தாலும், எமது சுயாதீனத்தைப் பாதுகாக்க தவறிவிடக் கூடாது, எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## முதுகெலும்பிருந்தால் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று உரையாற்றிய அவர், நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர நீதிமன்றத்தையும் நீதிபதியையும் அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டிருந்தமையையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்படியான ஒருவர்தான் தேசிய பொதுப் பாதுகாப்புக்குழுவின் தலைவராக உள்ளார். பொறுப்புக்கூறல் விடயத்தில் ஏற்கனவே சர்வதேச ரீதியாக இந்த நாடு அவநம்பிக்கை பெற்றுள்ளது. இதுபோன்றவர்களின் செயற்பாடுகளினால்தான் நாட்டில், சட்டங்கள் பின்பற்றப்படும் விடயத்திலும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அத்தோடு, சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவனும் நேற்று சமஷ்டியை வழங்க முடியாது எனப் பேசியிருந்தார். தமிழ்த் தேசியவாதிகள் சமஷ்டி தொடர்பாக பேசுகிறார்கள் என்றும் சமஷ்டி என்பது பிரிவினைவாதம் என்றும் அவர் கருத்து வெளியிட்டிருந்தார். இவரது இந்தக் கருத்தானது முட்டாள்தனமான ஒன்றாகும்.

போர்க்குற்றவாளியான சரத்வீரசேகர இவ்வாறு பேசுவது சாதாரண விடயம்தான்.

ஆனால், கலாநிதிப் பட்டம் பெற்ற சுரேன் ராகவன், சமஷ்டியை பிரிவினைவாதம் எனக் கூறுவது, அவரிடம் புலமை இல்லை என்பதையே காண்பிக்கிறது.

ஜனாதிபதி, நல்லிணக்கம் தொடர்பாக பேச்சுநடத்த தமிழ்க் கட்சிகளை அழைக்கும் போதுதான் இவ்வாறு அவர் பேசியுள்ளார். இதுபோன்றவர்களிடம் நான் சவால் விடுக்கிறேன். முடிந்தால் வடக்கு - கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்திக் காட்டுங்கள்.

தமிழ் மக்கள் ஒற்றையாட்சியையா, அல்லது சமஷ்டியையா விரும்புகிறார்கள் என்பது அப்போது தெரியவரும்.

இதற்கு நீங்கள் தயாரா? முதுகெலும்பு இருந்தால் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லுங்கள் எனவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (க)

## 13 ஆவது திருத்தத்தை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துக் கலந்துரையாடும்போது 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அழுத்தம் கொடுக்க வேண்டும்.

நிலங்களைப் பறிப்பதும், பொலிஸ் அதிகாரத்தைப் பறிப்பதுமே இலங்கை அரசின் நோக்கங்களாக இருக்கின்றன. இதன் மூலம் மாகாணங்களுக்கு சுயாட்சியை வழங்க வழி வகை செய்யும் 13 ஆவது சட்டத் திருத்தத்தை இலங்கை அரசு தொடர்ந்தும் முடக்கி வருகிறது, என்று அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே இந்தியாவுக்கு இலங்கை அரசு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான முயற்சியில் பிரதமர் மோடி ஈடுபட வேண்டுமென கேட்டுக்கொள்வதாகவும் தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

## இந்தியப் பிரதமர் மோடியை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் ஜனநாயகம், ஸ்திரத்தன்மை, பொருளாதார மீட்சி, ஆகியவற்றுக்கான தமது அர்ப்பணிப்பினையும் நம்பிக்கையினையும் இரு தலைவர்களும் இச்சந்திப்புகளின் போது மீள வலியுறுத்தியிருந்த அதே வேளை, நல்லிணக்கத்தினை ஊக்குவிப்பதற்காகவும் நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள இலங்கையின் அனைத்து சமூகங்களினதும் நலன்களுக்காக ஸ்திரமானதும் சமமானதும் வலுவானதுமான பொருளாதார வளர்ச்சிக்கான இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் முதலீட்டின் முக்கியத்துவத்தினை அவர்கள் உறுதிப்படுத்தியிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் பிரதான ஐந்து ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன. திருகோணமலை மாவட்ட திட்டங்களின் பொருளாதார அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு ஒப்பந்தம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம், சூரிய சக்தி திட்டத்திற்கான எரிசக்தி அனுமதி, ஐபிஎல் மற்றும் லங்கா பே ஆகியவற்றுக்கு இடையேயான நேரடி இணைப்பு ஒப்பந்தம்,யுபிஐ பணப்பரிவர்த்தனை விண்ணப்ப ஏற்பு மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவை இதில் அடங்குகின்றன.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ரணில் விக்ரமசிங்க மேற்கொள்ளும் முதல் இந்திய விஜயம் இதுவாகும். இரு நாடுகளும் இந்த ஆண்டு தூதரக உறவுகளை ஸ்தாபித்ததன் 75 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வேளையில் இந்த விஜயம் இடம்பெற்றுள்ளது.

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், இன்று காலை டெல்லியில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்தார். இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி ரணில் ஜனாதிபதி திரௌபதி முர்மு மற்றும் ஏனைய முக்கியஸ்தர்களையும் சந்திக்க உள்ளார்.

## ஆட்சியைப் பிடிக்கும் வரை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராடுகின்றார்கள். அவர்களை நாம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றோம்.

அந்த மக்களின் பிரச்சினை தீர வேண்டுமென்றால் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும். அந்த ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகப் பல வழிகளில் நாம் போராடுகின்றோம். ஆட்சியைப் பிடிக்கும் வரை போராட்டம் தொடரும்.

மின் வெட்டு இல்லாததால், எரிபொருளுக்கான வரிசை இல்லாததால் பிரச்சினை எல்லாம் தீர்ந்து விட்டது என்று சிலர் நினைக்கின்றார்கள்.

ஆனால், உண்மையில் பிரச்சினை தீரவில்லை. பிரச்சினை தீர்ந்தால் மக்கள் மூன்று வேளையும் சாப்பிட்டு நிம்மதியாக இருக்க வேண்டுமே?, என்று சுனில் ஹந்துன்நெத்தி கேள்வியெழுப்பியுள்ளார்.



## வவுனியா விபத்தில் இருவருக்குக் காயம்

வவுனியா, பறன்னட்டகல் பகுதியில் இன்று அதிகாலை பாரவூர்தியொன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியதில் சாரதியும் நடத்துனரும் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று அதிகாலை முறிகண்டியில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற பாரவூர்தி பறன்னட்டகல் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து குடைசாய்ந்ததில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. (க)

## ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸை வாங்க எவரும் முன்வரவில்லை




பாரிய நட்டத்தில் இயங்கி வரும் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தைத் தனியார் மயப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ள போதிலும் அதை வாங்குவதற்கு எவரும் முன்வரவில்லை என்று அறியமுடிகின்றது.

இதன் 49 வீத பங்குகளை அரசு வைத்துக் கொண்டு 51 வீத பங்குகளைத் தனியார் நிறுவனத்திடம் வழங்கும் திட்டம் உள்ளது.

ஆனால், அதை வாங்குவதற்கு எந்தவொரு நிறுவனமும் இதுவரை முன்வரவில்லை.

## குருந்தூர்மலையை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வொன்றை கடந்த சில நாட்களுக்கு முன்னர் நடத்த முயற்சித்தனர். எனினும் பொலிஸார் இதற்கு இடம் கொடுக்கவில்லை. இந்த நிலையில், ரவிகரன் உள்ளிட்ட சிலர், இன்றைய தினமும் அங்கே பொங்கல் நிகழ்வொன்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

1931 ஆம் ஆண்டு, வெளியிடப்பட்ட வர்த்தமானியில் குருந்தூர் மலை என்பது பௌத்த தொல்பொருள் சின்னமாகவே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, அங்கு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளிலும், அங்கு எந்தவொரு இந்துமத அடையாளங்களும் கண்டெடுக்கப்படவில்லை.

அங்கே எந்த இடத்திலும் தமிழ் எழுத்துக்களோ இந்து மதச் சின்னங்களோ காணப்படவில்லை. குருந்தூர்மலைப் பகுதியில் இந்துமத ஆலயம் இருப்பதாக இந்த பிரிவினைவாதிகள் தெரிவித்துவரும் கருத்துக்களினால்தான், அங்கு தற்போது பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

எனவே, குருந்தூர்மலையை பௌத்த தொல்பொருள் சின்னமாக மீண்டும் அறிவித்தால், இந்த முரண்பாடுகளை இல்லாது செய்ய முடியும். அவ்வாறு இல்லாவிட்டால், இதனால் பாரிய சர்ச்சைகள் ஏற்படும் என்பதோடு, தேசிய ஐக்கியத்திற்கும் இது பாதிப்பாக அமைந்துவிடும், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உங்கள் பிரதேசத்து
நிகழ்வுகள் பற்றிய
விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# தென்னாசிய முற்போக்கு இலக்கிய இயக்கங்களின் அறிவுசார் வரலாறு





(மாளிகைக்காடு நிருபர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானங்கள் துறையின் வரலாற்றுப் பிரிவு ஒழுங்கு செய்த, தென்னாசியாவில் முற்போக்கு இலக்கிய இயக்கங்களின் அறிவுசார் வரலாறு தொடர்பான விருந்தினர் விரிவுரை, கலை கலாசார பீடத்தின் கலை அரங்கத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலை கலாசார பீடத்தின் அனைத்துத் துறை மாணவர்களும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஏ. றமீஸ் பிரதம அதிதியாகப் பங்கேற்றதுடன், கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் மற்றும் பீடத்தின் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும்கலந்து கொண்டனர்.

வரலாற்றுப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளரும் சமூக விஞ்ஞானங்கள் துறையின் முன்னாள் துறைத் தலைவருமான கலாநிதி அநூஷியா சேனாதிராஜா வரவேற்புரையை வழங்கினார். தொடர்ந்து, கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் நிகழ்வு தொடர்பான அறிமுகத்தையும் கருத்தாடல் சம்மந்தமான புலமைசார் ஆரம்பத்தினையும் எடுத்துரைத்தார்.

அதனைத் தொடர்ந்து, தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஏ. றமீஸ் பிரதம அதிதி உரையை நிகழ்த்தினார். மேலும் பல்கலைக் கழகங்களில் இவ்வாறான கல்வி மற்றும் ஆய்வு ரீதியான கருத்தாடல்கள், விரிவுரைகளின் அவசியத்தை சுட்டிக் காட்டியதுடன் உலக நாடுகளின் அனுபவங்களையும் அவர் பகிர்ந்துகொண்டார்.

தென்னாசியாவில் முற்போக்கு இலக்கிய இயக்கங்களின் அறிவுசார் வரலாறு தொடர்பான விருந்தினர் விரிவுரை இந்த நிகழ்வின் பிரதான அம்சமாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் வளவாளராக இந்தியாவின் பஞ்சாப்பின் அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான இந்திய நிறுவனத்திலிருந்து மனிதநேய மற்றும் சமூக விஞ்ஞானங்கள் துறையின் தலைவரும் இணைப் பேராசிரியருமான கலாநிதி வி. ராஜேஷ் கலந்து கொண்டு, விரிவுரையை ஆய்வுக் கண்ணோட்டத்தில் வழங்கியிருந்தார்.

இந்தியாவின் முற்போக்கு இலக்கிய இயக்கங்களின் வரலாற்றை ஆய்வு ரீதியில் முன்வைத்த வளவாளர், இலங்கையின் முற்போக்கு இலக்கிய இயக்கங்கள் சம்பந்தமான தேடலின் அவசியத்தையும் எடுத்துரைத்திருந்தார்.

முற்போக்கு இலக்கிய இயக்கங்களின் வரலாறு தொடர்பான அறிவைப் பெறும் வகையில் வினா, விடைக் கான நேரமும் நிகழ்வில் ஒதுக்கப்பட்டிருந்தது.

## அட்டாளைச்சேனை பிரதேசசெயலகத்தின் இலக்கிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு



(எம் எப். நவாஸ்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் அம்பாறை மாவட்ட செயலகத்தின் வழிகாட்டலில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படும் இலக்கிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு, அட்டளைச்சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் நஹீஜா முசாபீர் தலைமையில் இன்று நடைபெற்றது.

நிகழ்வில் விசேட அதிதியாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர் டி. எம். றின்சான், கலாசார உத்தியோகத்தர்கள் எம். எஸ். ஜாஃபர், எம். எஸ். ராஜயா, ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்

இந்த நிகழ்வில் வளவாளராக ஒலுவிலைச் சேர்ந்த ஆசிரியரும் பிறை எப்.எம் அறிவிப்பாளருமான ஜெ. வாகாப்தீன் பங்கேற்றிருந்தார்.



# கென்யாவில் வரி அதிகரிப்புக்கு எதிராக மக்கள் போராட்டம் - 10 பேர் உயிரிழப்பு



கென்யாவில் பொருட்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்ப்பாளர்கள் நடத்திய போராட்டம் வன்முறையாக மாறியுள்ளது.

இதனால், கென்யாவின் நைரோபி மற்றும் மொம்பாசா ஆகிய நகரங்களிலுள்ள பாடசாலைகளை மூடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த மாதம் ஜனாதிபதி வில்லியம் ரூட்டோவின் அரசாங்கம் வரி உயர்வை அறிமுகப்படுத்திய பின்னர், அதிகரித்த வாழ்க்கைச் செலவுக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் பல போராட்டங்களை ஏற்பாடு செய்யப்பட்டன. போராட்டக்காரர்களை அடக்க பொலிஸார் களமிறங்கியதால் அது வன்முறையாக மாறியது.

போராட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டதை அடுத்து, போராட்டக்காரர்களால் பொலிஸார் தாக்கப்பட்டனர். இதனையடுத்து, பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில், 10 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அசம்பாவிதங்களைக் கண்டித்துள்ள மனித உரிமை அமைப்புகள், அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்துள்ளன.

நைரோபியில் போராட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டு வீசப்பட்டதால், அருகில் உள்ள பாடசாலையில் கல்வி பயிலும் 50 மாணவர்கள் பாதிப்புக்குள்ளாகிய நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

போராட்டங்கள் மேலும் அதிகரிக்குமனால் அது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் எனத் தெரிவித்துள்ள கென்யாவின் காவல்துறைத் தலைவர், நாடு முழுவதும் கலகத் தடுப்புப் படையினரை நிலைநிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளார். (மி)

## பிரிக்ஸ் கூட்டமைப்பு உச்சிமாநாட்டில் நிகழ்நிலையில் புடின் பங்கேற்கிறார்



தென்னாபிரிக்காவில் நடைபெறும் பிரிக்ஸ் கூட்டமைப்பு உச்சி மாநாட்டில் ரஷ்ய அதிபர் புடின் காணொளி வாயிலாக உரை நிகழ்த்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரிக்ஸ் மாநாட்டில் ரஷ்யாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் செர்கய் லாவ்ரோ நேரடியாகப் பங்கேற்பார் எனவும் ரஷ்யா அறிவித்துள்ளது.

பிரிக்ஸ் கூட்டமைப்பு என்பது பிரித்தானியா, இந்தியா, சீனா, ரஷ்யா தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டமைப்பு ஆகும்.

இதன் உச்சி மாநாடு தென்னாபிரிக்காவின் ஜோகனஸ்பேர்க் நகரில் எதிர்வரும் ஒகஸ்ட் 22 முதல் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (மி)




## பெரு ஜனாதிபதிக்கு எதிராக போராட்டம் பொலிஸார் கண்ணீர்ப் புகைத் தாக்குதல்

பெரு அதிபர் டினா பொலுவார்டேவை பதவி விலக வலியுறுத்தி மக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இதனையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் வெடித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பெட்ரோ கொஸ்டில்லோவால் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட டினா பொலுவார்டே, எதிர்கட்சி ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார். அத்தோடு பெட்ரோ காஸ்டில்லோவையும் கைது செய்துள்ளார்.

அதைத் தொடர்ந்து, கைது செய்யப்பட்ட பெட்ரோ காஸ்டில்லோவை விடுவிக்கக்கோரியும், மீண்டும் தேர்தல் நடத்த வலியுறுத்தியும் நடைபெற்றுவரும் போராட்டங்களில் இதுவரை 60க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

போராட்டத்தின்போது, தலைநகர் லிமாவில் நாடாளுமன்றம் நோக்கி பேரணியாகச் சென்றவர்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி போராட்டக்காரர்கள் பொலிஸாரால் அப்புறப்படுத்தப்பட்டனர். (மி)

## மணிப்பூர் கொடுமை- மனைவியையும் தந்தையும் காப்பாற்ற முடியவில்லை

### இந்திய இராணுவவீரர் ஆதங்கம்

இந்தியாவின் மணிப்பூரில் பழங்குடிச் சமூகத்தைச் சேர்ந்த இரண்டு பெண்களை கலவரக்காரர்கள் நிர்வாணமாக்கி ஊர்வலமாக இழுத்துச் சென்ற காணொளி ஒன்று வெளியாகி வைரலானது. இதனைத் தடுக்க முயன்ற பெண்ணின் சகோதரர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்தியா முழுவதும் இந்தக் கொடும் செயலுக்கு கடும் கண்டனம் எழுந்துள்ளது. பிரதமர் மோடி, ராகுல் காந்தி, உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த மே மாதம் 4ஆம் தேதி நடைபெற்ற சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண்களில் ஒருவரின் கணவரான இராணுவ வீரர் ஊடகம் ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது, திடீரென வந்த வன்முறை கும்பல் 2 அல்லது 3 பெண்களை தனியாக அழைத்து சென்றது. அதில் ஒருவர் என் மனைவி. அவர்களின் ஆடையை வலுக்கட்டாயமாக கழற்றச் சொன்னது அந்த வெறியாட்டக் கும்பல். அப்போது



அவர்களை காப்பாற்ற கிராம மக்கள் வந்தனர். ஆனால், அந்தக் கும்பல் என் கண் முன்னே என் தந்தையை சுட்டுக் கொன்றது.

நாட்டிற்காக கார்கில், இலங்கை போன்ற இடங்களுக்குச் சென்று பணியாற்றியுள்ளேன். ஆனால் எனது மனைவி, தந்தையைக் காப்பாற்ற முடியவில்லை. அந்தக் கும்பலுடன் பொலிசும் இருந்தனர். ஆனால், அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த வன்முறை வெறியாட்டம் நின்றுவிட்டதாக நினைக்கவில்லை. இது எதிர்காலத்திலும் தொடரும் என்ற அச்சம் உள்ளது. அந்தக் கலவரக்கும்பலுக்கு கடும் தண்டனை வழங்க வேண்டும், என அவர் தெரிவித்துள்ளார்.

## ரஷ்யாவின் முக்கியஸ்தர்கள், நிறுவனங்கள் மீது அஸ்திரேலியா திடீர் பொருளாதார தடை விதிப்பு

உலகின் மிகப்பெரிய இராணுவ கூட்டணியான நேட்டோவில் இணைவதற்காக உக்ரைன் முயற்சி செய்து வருகிறது. இதனால், தங்களது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என கருதி கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது.

இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் களமிறங்கின. அவை உக்ரைனுக்கு ஆயுத விநியோகம் மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கி வருகின்றன. இதன் மூலம் ரஷ்யாவின் தாக்குதலை உக்ரைன் சமாளித்து வருகிறது. 17 மாதங்களை தாண்டி போர் தொடர்ந்து நடைபெறுவதால் இது உலக பொருளாதாரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

கோதுமை, பார்லி, சூரியகாந்தி எண்ணெய் உள்ளிட்ட பொருட்களின் முக்கிய ஏற்றுமதி மையங்களாக இந்த இரு நாடுகளும் இருப்பதால் அவற்றின் விலையும் தாறுமாறாக உயர்ந்தது. இதனால் கருங்கடல் ஒப்பந்தம் மூலம் அந்தத் தானியங்கள் ஆபிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால், கடந்த 18 ஆம் திகதி இந்த ஒப்பந்தம் காலாவதியானதாக ரஷ்யா அறிவித்தது. இதற்கு ஐ.நா. மற்றும் உலக நாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்தன.

இந்த நிலையில் ரஷ்யாவின் சிறப்பு இராணுவ நடவடிக்கைக்கு ஆதரவு அளிப்பவர்கள் மீது பொருளாதார தடைகளை விதித்துள்ள நாடுகளின் பட்டியலில் தற்போது அவுஸ்திரேலியாவும் இணைந்துள்ளது. அதன்படி ரஷ்யாவில் உள்ள 35 நிறுவனங்கள் மீதும், முன்னாள் துணைப் பிரதமர்கள் அண்ட்ரே பெலோசோவ், டிமிட்ரி செர்னிஷென்கோ மற்றும் பெலாரசில் உள்ள ராணுவ உயர் அதிகாரிகள் என 10 தனிநபர்களின் மீதும் பொருளாதார தடை விதிக்கப்பட்டிருப்பதாக அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பென்னி வோங் தெரிவித்துள்ளார்.

## மணிப்பூர் சம்பவங்கள் குறித்து விவாதிக்கத் தயார் - ராஜ்நாத் சிங்

மணிப்பூர் விவகாரம் குறித்து விவாதிக்க இந்திய மத்திய அரசு தயாராக உள்ளது என்று இந்திய மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

மணிப்பூர் விவகாரம் குறித்து விவாதிக்க எதிர்க்கட்சிகள் அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றும் இரு அவைகளிலும் மணிப்பூர் குறித்து மத்திய அமைச்சர் அமித்ஷா, எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்குப் பதில் அளித்து அறிக்கை தாக்கல் செய்வார் என்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வேண்டுமென்றே அவையை முடக்குகின்றனர் எனவும் ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

# சர்வகட்சித் தலைவர்களுடனான ரணிலின் சந்திப்பு – மோடி ஆதரவு

இலங்கையில், நல்லிணக்கம், அதிகாரப் பகிர்வுக்கான விரிவான திட்டத்துடன் இணக்கத்தை எட்டுவதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் இலங்கை ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்த நிலையில் அந்த முயற்சிகளுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமது ஆதரவையும், ஒத்துழைப்பையும் தெரிவித்துள்ளார்.

உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியாவுக்கு சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி, அந்த நாட்டு பிரதமர் நரேந்திர மோடியை இன்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தியாவின் வளர்ச்சி அண்டைய நாடுகள் மற்றும் இந்து சமுத்திர வலய நாடுகளுக்கு சாதகமான தன்மையை ஏற்படுத்தும் என ரணில் விக்ரமசிங்க இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் மேம்படுத்தப்பட்ட பொருளாதார, உள்கட்டமைப்பு, தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றங்களை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராட்டியதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் மிகவும் கடினமான காலங்களில், இந்தியா வழங்கிய உறுதியான ஆதரவுக்காக இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும், இந்திய அரசாங்கம், இந்திய மக்களுக்கும் ரணில் விக்ரமசிங்க தனது நன்றியை தெரிவித்துள்ளார். (க)

# கௌதம் அதானியை சந்தித்தார் ரணில் பச்சை ஹைட்ரஜன் திட்டம் ஆராய்வு



உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு புதுடெல்லி சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்திய கோடீஸ்வர தொழிலதிபர் கௌதம் அதானியைச் சந்தித்துள்ளார்.

பன்னாட்டு நிறுவனமான அதானி குழுமத்தின் ஸ்தாபகரும் தலைவருமான அதானியுடனான சந்திப்பின்போது, ஜனாதிபதி பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தின் தொடர்ச்சியான அபிவிருத்தி, 500 மெகாவாட் காற்றாலைத் திட்டம் மற்றும் பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்வதற்கான அவர்களின் புதுப்பித்தல் ஆற்றல் நிபுணத்துவத்தை விரிவுபடுத்துதல் உள்ளிட்ட இலங்கையின் கவர்ச்சிகரமான திட்டங்கள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தியதாக கௌதம் அதானி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இதற்கிடையில், ரணில் விக்கிரமசிங்க இன்று காலை புதுடெல்லியில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலையும் சந்தித்துள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (மி)

# உணவக உரிமையாளர்களுடன் கல்முனையில் விசேட சந்திப்பு





(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுற்றுச்சூழல் மற்றும் தொழில் சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எஸ்.எம் பௌசாத் அவர்களினால் உணவகங்களை மேம்படுத்தி சுகாதாரமான உணவை வழங்கும் நோக்குடன் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக விசேட சந்திப்பொன்று இன்று வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸ் அவர்களின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பீ.ஏ.வாஜித் அவர்களும் தெரிவு செய்யப்பட்ட பிரிவுத் தலைவர்களும் கலந்து கொண்டிருந்ததுடன் தத்துமது பிரிவுகளினால் முன்னெடுக்கப்படும் செயற்றிடங்கள் தொடர்பிலும் உணவகங்களை மேம்படுத்தி சுகாதாரமானதும் சுத்தமானதுமான உணவினை வழங்குவதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றியும் விவரித்தனர்.

இக்கலந்துரையாடலுக்கு கல்முனை தெற்கு கல்முனை வடக்கு சாய்ந்தமருது நாவிதன்வெளி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுகளுக்கு உட்பட்ட உணவக உரிமையாளர்கள் அழைக்கப்பட்டிருந்ததுடன் அவர்களின் சந்தேகங்களை தீர்ப்பதற்கான நேரமும் வழங்கப்பட்டிருந்தது

இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்த பிரதிப் பணிப்பாளரும், பிரிவுத் தலைவர்களும் உணவகங்களின் மேம்பாடு தொடர்பில் விரிவான ஆலோசனைகளை வழங்கியிருந்தனர்.

விசேடமாக உணவகங்களில் உணவு தயாரிக்கும் போது பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறைகள், தொற்றா நோய்களை தவிர்ப்பதற்கான உணவு முறைமைகள் மற்றும் உணவினை தயாரிக்கும் நபர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள் பற்றியும் பிளாஸ்ரிக் அற்ற உணவக சுற்றுச்சூழலை பின்பற்றுவதன் அவசியத்தைப் பற்றியும் விரிவாக விளக்கியிருந்தனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பணிப்பாளர், உடலுக்கு ஆரோக்கியமான உணவினை வழங்குவது நம்மீதான முதற்கடமை என்றும் அதற்காக மரபு ரீதியான நுட்பங்களை பயன்படுத்துவது அவசியம் என்றும் உணவினை வழங்குவதென்பது ஒரு தாயின் பணி. இதனை இதய சுத்தியுடன் செய்யும் போது உங்களுக்கு இலாபமும் கிடைக்கும் வாழ்வில் ஏனைய செல்வ செழிப்புக்களும் கிடைக்கும் எனவே சட்ட நடவடிக்கைகள் எடுப்பதைவிட வாழ்வியலில் மாற்றத்தைக் கொண்டு வருவதன் மூலமே நேர்மறையான விளைவுகள் ஏற்படும் என தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.




யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
Visit North
Experience the Hospitality
NCI
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGHT
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILE zone
CCH
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர்
Kalaikkathir
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்